# பண்ணுருட்டி நகராட்சி

## *மன்ற கூட்ட அழைப்பிதழ்*

**************

பண்ணுருட்டி நகரமன்றத்தின் **சாதாரண கூட்டம் பிலவ வருடம்** தமிழ் மாதம் **ஆடி 13**, நாள் **29–07–2022 வெள்ளிக்கிழமை நேரம் பிற்பகல் 12.30** மணிக்கு, நகராட்சி அலுவலகத்திலுள்ள **“பேரறிஞர் அண்ணா மன்ற கூடத்தில்”** நடைபெறவுள்ளது.

அவ்வமயம் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

## பண்ணுருட்டி நகராட்சி

பண்ணுருட்டி நகராட்சி நகரமன்ற **சாதாரண கூட்டம்** 29–07–2022–ந் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள **"பேரறிஞர் அண்ணா"** மன்ற கூடத்தில் நடைபெறும் **சாதாரண கூட்டத்திற்கு** நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

**1.**

**நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

**மன்றப்பொருள்**

பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்காணும் சாலைகளின் பெயரினை மாற்றம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **தற்போது அழைக்கப்படும் தெருவின் பெயர்** | **மாற்றம் செய்யப்படும் தெருவின் பெயர்** |
|---|---|---|
| 1. | லிங்க் ரோடு (ரவுண்டானா முதல் தீயணைப்பு நிலையம் வரை) | டாக்டர் கலைஞர் கருணாநிதி சாலை |
| 2. | கும்பகோணம் சாலை | டாக்டர் அப்துல்கலாம் சாலை |
| 3. | புதிய கடலூர் மெயின் ரோடு மற்றும் ஆஸ்பிட்டல் சாலை (நான்குமுனை அண்ணா சிலை முதல் பக்கிரிப்பாளையம் ரயில்வே கேட் வரை) | அறிஞர் அண்ணா சாலை (மேற்கு) |
| 4. | ஆஸ்பிட்டல் சாலை, பழைய கடலூர் ரோடு மற்றும் பழைய கச்சேரி தெரு (யூனியன் அலுவலகம் முதல் பண்ணுருட்டி எல்லை வரை) | அறிஞர் அண்ணா சாலை (கிழக்கு) |
| 5. | சப்பாணி தெரு | காமாட்சி அம்மன் கோயில் தெரு |

**அலுவலக குறிப்பு:** மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

2. இந்நகராட்சியில் 2022–23 ஆம் ஆண்டு இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு மற்றும் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி மற்றும் அதற்கான வட்டி தொகை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண்.1500/2022/எச்1**

3. நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை தயார் செய்து வழங்கும் பணிக்கு கடந்த 22.07.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் உள்ளூர் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்** | **விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விபரம்** | **தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | PM Sarvesh Photo studio, Panruti | 400/- |
| 2 | Theeram studio & Vedio, Panruti | 450/- |
| 3 | SK Studio & Vedio, Panruti | 480/- |

மேற்கண்ட வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1-ல் கண்டுள்ள PM Sarvesh Photo studio, Panruti என்பவரது விலைப்புள்ளி தொகை குறைவானதாகும். எனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கிய PM Sarvesh Photo studio, Panruti என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கிடவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.15,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண்.1763/2022/எப்1**

4. இந்நகராட்சியில் நகரமன்ற தலைவர் அறைக்கு ஒரு கணினி (Computer All in one Machine) மற்றும் ஒரு பிரிண்டர் (All in one Machine) மற்றும், ஆணையாளர் அவர்களுக்கு அவ்வப்போது காணொலி கூட்டம் நடைபெறுவதாலும், UTIS மென்பொருள் Authorise செய்ய வேண்டியுள்ளதாலும் ஆணையாளர் அறைக்கு ஒரு கணினி (Computer All in one Machine) மற்றும் ஒரு பிரிண்டர் (All in one Machine) தேவை என்பதால், மொத்தமாக இரண்டு கணினிகள் (Computer All in one Machine) மற்றும் இரண்டு பிரிண்டர்கள் (All in one Machine) புதியதாக வாங்குவதற்கு ஆகும் செலவினம் ரூ.2,50,000/- (இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண். 416/2022/இ1**

5. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரையுள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கான மின் இணைப்புகள், நேரடி நீர் உந்துகள் மற்றும் சிறு மின்விசை பம்புகளுக்கு உள்ள மின்இணைப்புகளுக்கு மின்னேற்பி (Power Capacitor) வாங்கி பொருத்துவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதீப்பீடு ரூ.1,70,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(**கோப்பு எண்**. 2111 / 2022 /இ2)

6. பண்ணுருட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் கோவிட்–19, டெங்கு காய்ச்சல் உள்ளிட்டவை குறித்த விழிப்புணர்வை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் நகராட்சி வாகனங்களில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்யும் பொருட்டு 7 எண்ணிக்கையில் ஒலி பெருக்கி மற்றும் உபகரணங்கள் வாங்கி கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி | தொகை |
|---|---|---|
| 1. | திரு.பார்த்திபன் த/பெ மகாலிங்கம்<br>நெ.544/416, காந்தி ரோடு, தட்டாஞ்சாவடி | 1,40,500/– |
| 2. | திருமதி.மணிமாலா க/பெ முருகன்,<br>நெ.11/3, ரயில்வே நகர், புது கடலூர் ரோடு, திருவதிகை | 1,39,500/– |

வரப்பெற்றுள்ள மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திருமதி.மணிமாலா க/பெ முருகன் நெ.11/3, ரயில்வே நகர், புது கடலூர் ரோடு, திருவதிகை என்பவர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம். .

**கோப்பு எண். 3133/2021/எச்1**

7. பண்ணுருட்டி நகராட்சி அலுவலக முன்புறமுள்ள கல்வெட்டுகளை அகற்றி சுற்றுச்சுவர் அருகே நகர்த்தி பொருத்தவும் மேற்கண்ட இடத்தில் ஆகஸ்ட் 15, 2022–ம் ஆண்டு 75–வது சுதந்திர தின அமுத பெருவிழா நினைவாக 12 அடி உயரமுள்ள அசோக் பில்லர் வடிவிலான ஸ்தூபி மற்றும் தேசியக் கொடி கம்பம் புதியதாக அமைத்திட ரூ.1,50,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(**கோப்பு எண்**. 2104 /2022 /இ1)

8. பண்ணுருட்டி நராட்சி வார்டு எண்.08, சுந்தர் பிளாட் என்ற தெருவின் நடுவில் மின்கம்பம் ஒன்று பொது மக்களுக்கு இடையூறாக உள்ளது. அதனை அகற்றி மாற்று இடத்தில் அமைத்திட ஆகும் செலவினத்திற்கு மதிப்பீடு தயார் செய்து அளிக்க கோரி செயற்பொறியாளர், மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தினை கோரிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண். 2129/இ2/2022**

9. பண்ணுருட்டி நகராட்சியில் 2021–22க்கான ஒரு ஆண்டு சாதனை திட்டப்பணிகளின் விபரத்தை தமிழ் தினசரி நாளிதழான மாலை மலர் நாளிதழில் நாள். (21.05.2022) அன்று செய்தி வெளியிடப்பட்டதற்கு, மலர் பப்ளிக்கேஷன் நிறுவனத்திடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.25,988/–யை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பட்டியலுக்கான தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(**கோப்பு எண்**. 2046 / 2022 /இ1)

10. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் உள்ள அனைத்து ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மோட்டார்கள், பல வகைப்பட்ட PVC பைப், G.I.பைப்புகள் U.G கேபிள்கள், மின் மோட்டார் காயில் கட்டுதல் மற்றும் பழுது பார்த்தல் பணிக்கு, மேலும் கோடை காலங்களில் ஏற்படும் வறட்சியை முன்னிட்டு பொது மக்களுக்கு சீரான பாதுகாப்பான குடிநீர் தங்கு தடையின்றி வழங்கிடவும் 2022 – 23 ஆண்டு பராமரிப்பு பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(**கோப்பு எண்**. 2111 / 2022 /இ2)

11. இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுவரும் வண்டி எண் TN31BM8044 க்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் பொருட்டு பழுது நீக்கம் செய்து தகுதிச்சான்று பெறுவதற்கான தோராய செலவினம் **ரூ. 2.00 இலட்சத்திற்கு** (ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

<u>அலுவலகக் குறிப்பு:–</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(கோ.எண் 2028/2022/எச்2)**

12. இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வண்டி எண் TN–31CX 1327 க்கு தகுதிச்சசான்று புதுப்பிக்கும் பொருட்டு பழுது நீக்கம் செய்து தகுதிச்சான்று பெறுவதற்கான தோராய செலவினம் **ரூ.1.75/–இலட்சத்திற்கு** (ஒரு இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்)மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

<u>அலுவலகக் குறிப்பு:–</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(கோ.எண் 2027/2022/எச்2)**

13. அரசாணை (நிலை) எண் 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

30.04.1997 நாளிட்ட அரசாணையின்படி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ஆட்வெளிக்கொணர்வு (Out Sourcing) மூலம் பணியாளர்களை நியமனம் செய்வதற்கான திருத்திய கருத்துரு அனுப்பி வைத்திட 14.07.2022 ந் தேதிய வாட்ஸ் ஆப் தகவல் மூலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் பேரில் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கருத்துரு விபரங்கள் பின்வருவாறு.

**கருத்துரு**

| வ. எண். | வேலை விபரம் | கணக்கீடு | அளவு கோலின்படி தேவை |
|---|---|---|---|
| 1 | 250 குடியிருப்புகளுக்கு 3 பேர் வீதம் 16171 குடியிருப்புகளுக்காக | 16171/250x3 | 194 |
| 2 | டாடா ஏஸ் வாகனம் | 5x3 | 15 |
| 3 | லாரிகள் 2 Nos (4 பேர் வீதம்) | 2x4 | 8 |
| 4 | பேருந்து நிலையம் | 1x4 | 4 |
| 5 | தினசரி மார்க்கெட் | 1x2 | 2 |
| 6 | கலவை உரக்கிடங்கு | 1x2 | 2 |
| 7 | இலவச கழிப்பறை | 1x2 | 2 |
| | **தேவைப்படும் மொத்த பணியாளர்கள்** | | **227** |

| | | |
|---|---|---|
| 1 | அரசு ஆணை (நிலை) எண் 101ன் படியான அளவுகோலின்படி தேவைப்படும் தூய்மை பணியாளர் எண்ணிக்கை | 227 |
| 2 | அனுமதிக்கப்பட்ட தூய்மை பணியிடங்கள் | 139 |
| 3 | தற்போது பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் | 91 |
| 4 | காலியிடம் | 48 |
| 5 | சுய உதவிக்குழுக்கள் /தனியார் ஒப்பந்தத்தின் வாயிலாக அளவுகோலின்படி பணி மேற்கொள்ள தேவைப்படும் பணியாட்கள் | 136 |

<u>**நகராட்சி பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ளுதல்— மதிப்பீட்டு தொகை கணக்கிடுதல்**</u>

நகராட்சி வாயிலாக ஊதிய ஏற்ற முறையில் நிரந்தரமாக தூய்மை பணியாளர்களை நியமித்து துப்புரவு பணியினை மேற்கொண்டால் மேற்படி 136 பணியாளர்களுக்கு வழங்கவேண்டிய ஊதியம் மற்றும் இதர படிகள் விபரம்

<u>ஒரு நபருக்கான மாத ஊதியம்</u>

| | | |
|---|---|---|
| அடிப்படை ஊதியம் | – | 15700.00 |
| அகவிலைப்படி | – | 4867.00 |
| வீட்டு வாடகைப்படி | – | 700.00 |
| மருத்துவப்படி | – | 300.00 |
| சலவைப்படி | – | 200.00 |
| **மொத்தம்** | – | **21767.00** |

136 பணியாளர்களுக்கு ஒரு மாதத்திற்கு வழங்க வேண்டிய ஊதியம் 136 x21767 = ரூ. 29,60,312.00

| | |
|---|---|
| (அ) 136 நபர்களுக்கு 12 மாதத்திற்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் | 3,55,23,744.00 |
| (இ) சீருடை & தையற்கூலி நபர் 1க்கு 2000 வீதம் | 2,72,000 |
| (ஈ) காலணி (1 நபருக்கு ரூ.350/–) | 47,600.00 |
| பாதுகாப்பு உபகரணங்கள் 1 நபருக்கு ரூ.3465/– | 4,71,240.00 |

12 மாதங்களுக்குஆகும் மொத்த செலவினம் ரூ. 3,63,14,584.00

**சுய உதவிக்குழு அல்லது ஒப்பந்தம் வாயிலாக மனித சக்தியை பெற்று**

**(Man Power) தூய்மை பணி மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை கணக்கிடுதல்**
**(out sourcing of man power from SHG/Contract Basis)**

| | | |
|---|---|---|
| ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட வேண்டிய பணியாளர்கள் | - | 136 |
| மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி விவரப்படி சந்தை விகிதம் (Schedule of rate 2021-22) | - | ரூ. 445.00 |
| 1 நபருக்கு 30 நாட்களுக்கு வழங்க வேண்டிய தொகை | - | ரூ. 13350.00 |
| 136 பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய மாத சம்பளம் | - | ரூ. 1815600.00 |

| | | |
|---|---|---|
| 136 பணியாளர்களுக்குகான ஊதியம் | 1815600 x 12 | ரூ. 21,787,200 |
| ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு (ESI 1.75%) | 31773x12 | 381276 |
| EPF 13% | 236028x12 | 2832336 |
| Uniform Safety Equipments 5% | 90780 x 12 | 1089360 |
| Administrative Charges 5% | 90780 x12 | 1089360 |
| **Total** | **2264961x12** | **2,71,79,532** |

| | |
|---|---|
| 12 மாதங்களுக்கு சம்பளம் | ரூ. 21787200 + ரூ. 5392332 |
| | **ரூ. 2,71,79,532** |

| | |
|---|---|
| **ஒப்புநோக்குப்பட்டியல்** | |
| 136 தூய்மை பணியாளர்களை நகராட்சி வாயிலாக ஊதிய ஏற்ற முறையில் (நிரந்தர பணியாளராக) பணி நியமனம் செய்யப்பட்டால் 1 வருடத்திற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை | ரூ. 3,63,14,584.00 |
| மேற்கண்ட பணியினை சுய உதவிக்குழுக்கள்/தனியார் ஒப்பந்தத்தின் வாயிலாக மேற்கொண்டால் 1 வருடத்திற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை | ரூ. 2,71,79,532.00 |
| **வித்தியாசம்** | **ரூ. 91,35,052.00** |

எனவே, அட்டவணையில் கண்டுள்ள 136 பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் ஊதியத்துடன் இதர பயன்களையும், சேர்த்து சுய உதவிக்குழுக்கள் அல்லது தனியார் ஒப்பந்த அடிப்படையில் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள ஊதியத்தின்படி நியமித்துக் கொள்ளவும், அவ்வப்போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவிக்கும் தினக்கூலி விவரப்படி சந்தை விகிதத்தில் அவ்வூதியத்தினை காலமுறைப்படி உயர்த்தி கொள்ளவும் வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்துருவின் மீது நிர்வாக அனுமதி **வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பின்னேற்புக்கு வைக்கப்பட்டுள்ளது.**

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1. மன்றம் பின்னேற்பு அளிக்கலாம்.

**(கோப்பு எண் : 1814/2022/எச்2)**

**14.** பண்ணுருட்டி நகராட்சியில் KNMT (கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-23) வார்டு எண் A Block 33 மூப்பனார் நகர் பகுதியில் புதியதாக பூங்கா அமைக்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண்.79 நாள்.30.06.2022-ல் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 15.07.2022-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| | | | **ஒப்பந்ததாரரின்** |

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | M/s.ஸ்ரீ பிரம்மநாத சுவாமி கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர், பண்ணுருட்டி. | 41.95 | 0.94 % சதவிகிதம் குறைவு |
| 2 | திரு.வி.சுரேஷ்பாபு, ஒப்பந்ததாரர், கடலூர். | 41.95 | 3.20 % சதவிகிதம் அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.ஸ்ரீ பிரம்மநாத சுவாமி கன்ஸ்ட்ரக்ஷன், பண்ணுருட்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.94 **%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண்**. 266/2022/இ1)

**15.** பண்ருட்டி நகராட்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஓராண்டு சாதனை நலத்திட்டங்கள் தமிழ் முரசு நாளிதழ் 3.6 .2022 விளம்பர செய்தமைக்கு கல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு ரூ.20,000/–ஐ நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 1856/2022/டி2**

**16.** பண்ருட்டி நகராட்சியின் முதல் நகரமன்ற கூட்டத்திற்கு வருகை தரும் நகரமன்ற தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் வரவேற்கும் விளம்பரம் தினமலர் தினசரி நாளிதழ் 14.03.2022 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கான கட்டணம் ரூ.34,650/– மற்றும் தமிழக அரசு ஓராண்டு சாதனை தொடர்பான விளம்பரம் தினமலர் தினசரி நாளிதழில் 22.05.2022 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கான கட்டணம் 34,650/– ஆக மொத்தம் ரூபாய் 69,300/–ஐ ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஏஜென்சி நிறுவனத்திற்கு வருவாய் நிதிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 1855/2022/டி2**

**17.** பண்ணுருட்டி நகராட்சி பொதுசுகாதாரபிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடுகள் தோறும் கழிவுகளை தரம்பித்து வாங்குவதில் உலர் கழிவுகளை சேகரித்து வளமீட்பு மையத்தில் கொண்டு சேர்க்க ஏதுவாக 10000 எண்ணிக்கையில் போரா பைகள் சப்ளை செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி | தொகை |
|---|---|---|
| | திரு. பார்த்திபன் | |

| | | |
|---|---|---|
| 1 | த/பெ மகாலிங்கம்<br>544/416, காந்தி ரோடு,<br>தட்டாஞ்சாவடி, பண்ருட்டி. | ரூ. 3,54000/- |
| 2 | திருமதி. மணிமாலா,<br>க/பெ, முருகன்,<br>11/3, ரயில்வே நகர்,<br>புது கடலூர் ரோடு,<br>திருவதிகை, பண்ருட்டி. | ரூ. 3,48,000/- |

மேற்காணும் ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1) வரபெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி மணிமாலா க/பெ முருகன், 11/3, ரயில்வே நகர், புது கடலூர் ரோடு, திருவிதகை என்பவர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண் 3133/2021/எச்1)**

**18.** இந்நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் தெற்குப் புறம் பார்த்த கடை எண்.11 RCC கட்டிடத்தில் உள்ள இருசக்கர வாகனம் மிதிவண்டி நிறுத்துமிடம் கிழக்கு மேற்கு 170 சதுரடியும் வடக்கு தெற்கு 16 சதுரடியும் 23.08.2016 ஆம் ஆண்டில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் விடப்பட்டதில் திரு.மோகன்பாபு த/பெ துரைராஜ் என்பவர் மாத வாடகை ரூ.2500/-ஐ மற்றும் மேல் மாடி முதல்தளம் ரூ.700/-க்கு பொது ஏலத்தில் எடுக்கப்பட்டு மன்ற தீர்மான எண்.1822 நாள் 31.08.2016-ல் அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில் குத்தகை உரிமம் வழுங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து அரசாணை (நிலை) எண்.181/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை, நாள் 19.09.2008-ன் படி மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15% வாடகை உயர்வு செய்யப்பட்டு தற்போது தரைதளத்திற்கு மாத வாடகை ரூ.2875/-ம் முதல் தளத்திற்கு மாத வாடகை ரூ.805/-ம் நிர்ணயம் செய்யப்பட்டு தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட இடத்தினை பொது ஏலம் விடும் பட்சத்தில் ஏலத்தொகை அதிகரிக்கும் என்று நகர்மன்ற உறுப்பினர்களால் நகர்மன்ற கூட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றன. அதனைத் தொடர்ந்து மேற்கண்ட இடத்தினை ஆய்வு செய்து உரிய அறிக்கை சமர்ப்பிக்க வருவாய் ஆய்வாளர் அவர்கள் கோரியதை தொடர்ந்து வருவாய் ஆய்வாளர் அவர்களின் குறிப்பில் மேற்கண்ட குத்தகை உரிமம் ரத்து செய்து ஆண்டு குத்தகை இனமாக பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரும் பட்சத்தில் குத்தகை தொகை பல மடங்கு அதிகரிக்கும் என தெரிவித்துள்ளார்.

எனவே மேற்கண்ட குத்தகை உரிமத்தை ரத்து செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்டுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் அருகில் உள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடத்திற்கான குத்தகை உரிமத்தினை ரத்து செய்து ஆண்டு குத்தகை இனமாக பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.** 3015/2016/அ1

**19.** பண்ணுருட்டி நகராட்சி IUDM 2018 – 19 திட்டத்தின் கீழ் ரூ.**360.00/-** இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வி.ஆண்டிக்குப்பம் கிராமம் மற்றும் விழமங்கலம் கிராம பகுதியில்

வார்டு –A,பிளாக் – 2, நகரளவு எண்–14/6 மற்றும் 7/1 மந்தைவெளி புறம்போக்கு இடத்தில் 30 KLD கசடு சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 26888/UGSS-2/2018-42, நாள்.09.02.2019–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட பணியினை தொடர அப்பகுதி பொதுமக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாகவும் மாவட்ட நிர்வாகம் தலையிட்டும் எந்த ஒரு தீர்வும் எட்டப்படாத நிலையிலும் இத்திட்டத்தினை செயலாக்க இயலாத சூழ்நிலையில் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.360.00 லட்சத்திற்கான அனுமதியினை ரத்து செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 07.07.2022–ந் தேதிய ந.க.எண்.26888/2018/இ.எ.1–2 எண்ணிட்ட உத்திரவில் தெரிவிக்கப்பட்டு வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும், SBM 2.0 கீழ் பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.** 18/2019/இ1

20. வருகிற சுதந்திர தினத்தை 75வது சுதந்திர திருநாள் அமுத பெருவிழாவாக கொண்டாடிடும் பொருட்டு அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி ஏற்றிட தேவைப்படும் தேசிய கொடிகளை, கடலூர் பெண்கள் தையல் கூட்டுறவு சங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ள கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து தேசிய கொடிகளை கொள்முதல் செய்வதற்கு அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u> : 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(கோப்பு எண். 2050 /2022/எச்1)**

21 பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 07ல் உள்ள ராசி நகர் மற்றும் திருவள்ளுவர் நகர் பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் இல்லாததால் வீட்டுக்குடிநீர் இணைப்பு வழங்க முடிவதில்லை. மேற்கண்ட பகுதிகளுக்கு குடிநீர் பிரதான குழாய் அமைத்து தர தயாரிக்கப்பட்டுள்ள மதீப்பீடு ரூ.90,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(கோப்பு எண். 2130/2022 /இ2)**

நகரமன்ற தலைவர்,
பண்ணுருட்டி நகராட்சி.